# மே – 12 – பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு

## "என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன" யோவா 10:27

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி13 : 14, 43 - 52

அந்நாட்களில் பவுலும், பர்ணபாவும் பெருகையிலிருந்து புறப்பட்டுச் சென்று பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவை அடைந்தார்கள். ஓய்வு நாளன்று அவர்கள் தொழுகைக்கூடத்திற்குச் சென்று அங்கு அமர்ந்திருந்தார்கள். அவர்கள் வெளியே சென்றபோது, அடுத்த ஓய்வு நாளிலும் இவைபற்றித் தங்களோடு பேசும்படி மக்கள் அவர்களை வேண்டினர்.தொழுகைக்கூடத்தில் இருந்தோர் கலைந்து சென்றபோது பல யூதர்களும் யூதம் தழுவிக் கடவுளை வழிபட்டவர்களும் பவுலையும், பர்னபாவையும் பின் தொடர்ந்தார்கள். இவ்விருவரும் அவர்களோடு பேசிக் கடவுளின் அருளில் நிலைத்திருக்கும்படி அவர்களைத் தூண்டினர்.அடுத்து வந்த ஓய்வு நாளில் ஆண்டவரின் வார்த்தையைக் கேட்க ஏறக்குறைய நகரத்தார் அனைவரும் கூடிவந்தனர்.மக்கள் திரளைக்கண்ட யூதர்கள் பொறாமையால் நிறைந்து, பவுல் கூறியதை எதிர்த்துப் பேசி அவரைப் பழித்துரைத்தார்கள்.பவுலும்இ பர்னபாவும் துணிவுடன், "கடவுளின் வார்த்தையை உங்களுக்குத் தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால் நீங்கள் அதனை உதறித் தள்ளி நிலை வாழ்வுக்குத் தகுதியற்றவர்கள் என்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே நாங்கள் பிற இனத்தாரிடம் செல்லுகிறோம்.ஏனென்றால், "உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்" என்று ஆண்டவர் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்" என்று எடுத்துக் கூறினார்கள். இதைக்கேட்ட பிற இனத்தார் மகிழ்ச்சியடைந்தனர் ஆண்டவரின் வார்த்தையைப் போற்றிப் புகழ்ந்தனர். நிலைவாழ்வுக்காகக் குறிக்கப்பட்டோர் அனைவரும் நம்பிக்கை கொண்டனர். அப்பகுதியெங்கும் ஆண்டவரின் வார்த்தை பரவியது.ஆனால் யூதர்கள் கடவுளை வழிபட்டு வந்த மதிப்புக்குரிய பெண்களையும் நகரின் முதன்மைக் குடிமக்களையும் தூண்டிவிட்டு, பவுலையும் பர்னபாவையும் இன்னலுக்குள்ளாக்கி, அவர்களைத் தங்களது நாட்டிலிருந்து துரத்திவிட்டார்கள்.அவர்கள் தங்கள் கால்களில் படிந்திருந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிவிட்டு இக்கோனியாவுக்குச் சென்றார்கள்.சீடர்களோ தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள்.

**பதில்பாடல் :** நாம் அவர் மக்கள். அவர் மேய்க்கும் ஆடுகள்.

### இரண்டாம் வாசகம் :திருவெளிப்பாடு 7 : 9, 14 - 17

யோவான் நான் யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான மக்களைக் கண்டேன். அவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள் அரியணைக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள் வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாய்க் கையில் குருத்தோலைகளைக் பிடித்திருந்தார்கள். நான் அவரிடம், "என் தலைவரே, அது உமக்குத்தான் தெரியும்" என்றேன். அதற்கு அவர் என்னிடம் கூறியது "இவர்கள் கொடிய வேதனையிலிருந்து மீண்டவர்கள் தங்களின் தொங்கலாடைகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள்.இதனால்தான் கடவுளது அரியணைமுன் நின்றுகொண்டு அவரது கோவிலில் அல்லும் பகலும் அவரை வழிபட்டுவருகிறார்கள் அரியணையில் வீற்றிருப்பவர் அவர்களிடையே குடிகொண்டு அவர்களைப் பாதுகாப்பார்.இனி அவர்களுக்குப் பசியோ தாகமோ இரா கதிரவனோ எவ்வகை வெப்பமோ அவர்களைத் தாக்கா.ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி அவர்களை மேய்க்கும் வாழ்வு அளிக்கும் நீரூயஅிற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும். கடவுள் அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்."

### நற்செய்தி : யோவான் 10 : 27 – 30

அக்காலத்தில் இயேசு கூறியது : "என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப்பின் தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ளமாட்டார். அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும்விடப் பெரியவர். அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள இயலாது. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்" என்றார்.

**தியானம்:** இறையாட்சி என்பது கிறிஸ்த்தவர்களுக்கு மட்டும் சொந்தமான ஒன்று அல்ல என்பதனை இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அது அனைவருக்கும் அதாவது இனம், மதம் மொழி கடந்த அனைவருக்கும் சொந்தமானது. கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழும் அனைவரும் இறையயரசில் நுழைய தகுதி பெற்றவர்களே!. யேசு வாழ்ந்த காலத்தில் கூடுதலான மக்கள் ஆடுகளை வளர்த்தார்கள். அவைகளை புல் வெளியில் கொண்டு சென்று மேய்க்கும் பொறுப்பு இடையருக்கு உண்டு. அவர்கள் ஓரே இடத்தில் இருப்பதில்லை. பருவ காலத்திற்கேற்ப புல்வெளிகளையுடைய இடங்களுக்கு மாறி மாறி செல்வார்கள். யேசுவின் பிறப்பு முதலில் இவர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் நோக்கமும் இதுவாக இருக்கலாம். யேசுவின் பிறப்பு மக்களுக்கு அறிவிகப்பட வேண்டும். நாடோடிகளாக செல்லும் இவர்கள் தாம் செல்லும் இடம் எல்லாம் தாம் அறிந்த கேட்ட செய்திகளை பரப்பவல்லவர்களாக இருந்தார்கள். இப்போது போன்று அக்காலத்தில் தொடர்பு சாதனங்கள் இருக்கவில்லை. வாய் வழியாகத்தான் கூடிதலான செய்திகள் அறிவிக்கப்பட்டன. எனவே மறைபரப்பு பணியில் இடையரின் பங்கு அதிகளவில் உண்டு எனலாம். அதனால் தான் நாம் "மறை ஆயர்" என்று குறிப்பிடுகின்றோம். அவர்கள் மக்களை வழிநடத்தும் மிகப்பெரிய பொறுப்பில் இருக்கின்றார்கள். அண்மையில் மலைக்கோவில் என்று அனைவராலும் அழைக்கப் படுகின்ற புனித சூசையப்பர் கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுத்துக் கொண்டிருக்கும் போது குருவானவர் ஒரு மனிதரால் குத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியாக இருந்தது. பலி வேலையில் ரத்தம் சிந்திய பல நிகழ்வுகள் திருச்சபையின் வரலாற்றில் உண்டு. மறைபரப்புப் பணி என்பது அன்று மட்டும் அல்ல இன்றும் ஆபத்தானது என்பதனை இது நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அன்று சீடர்கள் உயிருக்கு அதிக ஆபத்தான நிலையில்தான் இதனை செய்தார்கள். எனவே நாமும் எம்மால் முடிந்தளவுக்கு இறை அரசை அறிவுக்கும் பணியில் எம்மை ஈடுபடுத்துவோம். நமது சொல்லால், செயலால், வாழ்வால் அதனை வாழ்ந்து காட்டுவோம்.